

# குப்பை மேலாண்மை



சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்டு சிவிக் ஆக்ஷன் குரூப் (CAG)
புதிய எண்.246, பழைய எண்.277-B, டி.டி.கே. சாலை ((ஜெ.ஜெ. சாலை)
ஆள்வார்பேட்டை, சென்னை 600 018.
தொலைபேசி எண்: 044-24994458 / 24660387
மின்னஞ்சல்: helpdesk@cag.org.in

தேவை இல்லை என்று நாம் நிராகரிக்கும் பொருட்கள் அனைத்தும் "குப்பை" ஆகின்றன. இன்று, அளவிற்கு அதிகமான நுகர்வு மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டால், குப்பையின் அளவு மிக அதிகமாகி விட்டது. மேலும், அதை சரியான முறையில் அகற்றாமல், அங்கங்கே எறிவதால், பல தரைவாழ் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் அழிவதோடு மட்டுமல்லாமல், அவை சாக்கடைகளை அடைத்து விடுகின்றன. மேலும், நிலத்தின் வளமும் குறைந்து விடுகிறது. ஆகவே, இவ்வாறு சுற்றுச்சூழலை மாசுபடுத்தி உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் இந்த குப்பைக்கான காரணமாக விளங்கும் பொருட்களின் பயன்பாட்டினை குறைப்பதுடன், அதனை சரியான முறையில் கையாள்வதும் நம் கடமையாகும்.

குப்பையை இரண்டு வகையாக பிரிக்க வேண்டும்:

1. மக்கும் குப்பை
2. மக்காத குப்பை

## மக்கும் குப்பை

உதாரணம் : காய்கறி மற்றும் பழக்கழிவுகள், மாமிசக் கழிவுகள், சமைத்த மீதமுள்ள உணவு, காய்ந்த பூ, இலை தழைகள், போன்றவை.







## மக்காத குப்பை

உதாரணம் : பால் கவர், பிளாஸ்டிக் பொருட்கள், தெர்மொகோல் அட்டைகள், கண்ணாடி பொருட்கள், உலோகப் பொருட்கள், எலக்ட்ரானிக் பொருட்கள், போன்றவை.













மறுசுழற்சி செய்யக்கூடிய அட்டைபெட்டி, பிளாஸ்டிக், பால் கவர் (கழுவி காய வைத்தது), உலோகப்பொருட்கள் போன்றவற்றை காயலாங்கடையில் போட வேண்டும். அவர்கள் ஏற்றுக் கொள்ளாத பொருட்களை மட்டுமே குப்பை கிடங்கிற்கு அனுப்ப வேண்டும்.

## மக்கும் குப்பையை எப்படி பயன்படுத்துவது?

1. வீட்டில் தினந்தோறும் உருவாகும் மக்கும் குப்பையை ஒரு தொட்டியில் சேகரிக்கவும்



2. இந்த குப்பையை இரண்டு நாட்களுக்கு ஒரு முறை கிளறி விடவும்.



3. ஈரமாகவும் இல்லாமல், முழுதாக காய்ந்தும் போகாமலும் இருக்க, மரத்துகள்கள், நீர் மோர், தேங்காய் நார் தூள், மாட்டுச் சாணம் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றை சிறிதளவில் சேர்த்து கிளறி விடவும்.



4. 30 - 45 நாட்கள் கழித்து இது இயற்கை உரமாக மாறிவிடும்.



5. இந்த உரத்தை, வீட்டில் தொட்டியில் செடிகள் வளர்த்து, அதற்கு உரமாக பயன்படுத்தலாம்.



நாம் எளிதில் மக்காத பொருட்களின் பயன்பாட்டைக் குறைத்து, பின்பு தவிர்த்து, நம் சுற்றுப்புறத்தின் தூய்மையை பாதுகாத்து நம் வீட்டிற்கும் நாட்டிற்கும் நன்மை செய்வோம்!